# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 1178/2016/ந

ஆணை எண்: 0181/2016

நாள்: 03/12/2016

திரு. ஆர். காசிநாதன்,
நெ. 19, ஆசிர்வாதம் நகர்,
வடக்கு மெயின் ரோடு,
சிதம்பரம் - 608 001.

மனுதாரர்

1. திரு. செல்வராஜ்,
2. திரு. ஜெகதீசன்,
நகராட்சி ஆணையர்,
சிதம்பரம் நகராட்சி.

எதிர்மனுதாரர்

## ஆணை:-

மனுதாரரது முறையீட்டு மனு 22.11.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.1178/16 ஆக பதிவு செய்யப்பட்டது.

இம்மனுவில் சிதம்பரம் நகராட்சி ஆசிர்வாதம் நகர் எனும் பகுதியில் "ஜனதா டயர் ரீட்ரேடிங் கம்பெனி" எனும் நிறுவனம் இயங்கி வருவதாகவும், இந்நிறுவனத்திலிருந்து குடியிருப்பு பகுதியில் டயர் துகள்கள், துர்நாற்றம் வருவதால் மூச்சு திணறல் ஏற்படுவதால் பசுமைத் தீர்ப்பாயத்தை அணுகி மேற்படி நிறுவனத்தை நிறுத்த உத்தரவுகள் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் மேற்படி நிறுவனத்தார் மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் மேற்படி பகுதி வணிகப் பகுதியாக செயல்பட வேண்டுமென வழக்கு தொடர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 06.08.2001ல் அப்போதைய நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்ட சான்றில் மேற்படி பகுதியை "வணிகப்பகுதி என அனுமதி வழங்கப்பட்ட இடம்..." என சான்றளித்துள்ளதே காரணமெனவும் இச்சான்று குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறும் 06.082001ல் வழங்கப்பட்ட அச்சான்றினை ரத்து செய்து உத்தரவிடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

"2014-ஆம் ஆண்டு தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b) மற்றும் 10 (3) (c) ன் படி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும், முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின் தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் தொடர்பான பொருட்பாடுகளில் முறைமன்ற நடுவர் விசாரணை செய்தல் கூடாது."

இம்முறையீட்டில் குறிப்பிட்டுள நிகழ்வு தொடர்பாக நீதி மன்ற வழக்கு நிலுவையில் உள்ள நிலையிலும் ஐந்தாண்டுகளுக்கு முந்தைய நிகழ்வென்பதாலும் மேற்குறிப்பிட்ட சட்டக் கூறுகளின்படி இப்பொருட்பாடு இம்முறை மன்ற நடுவ விசாரணைக்கு உகந்ததல்ல என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2016-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 03-ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

16/12/2016
செயலாளர்

பெறுநர்

1. திரு. ஆர். காசிநாதன்,
   நெ.19, ஆசிர்வாதம் நகர், வடக்கு மெயின் ரோடு,
   கடலூர் மாவட்டம்,
   சிதம்பரம் -608 001.

2. நகராட்சி ஆணையர்,
   சிதம்பரம் நகராட்சி,
   கடலூர் மாவட்டம் - 608 001.